1973 ஆகஸ்ட் 6] [பேரவைத் தலைவர்]

உறுப்பினர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும், நல்ல முறையில் நடந்துகொள்ளக் கற்றுக்கொடுக்க வேண்டும் என்று சொன்ன நேரத்தில், எல்லாத் தலைவர்களுக்கும்தான் சொன்னேன். இந்தப் பக்கம் இருப்பவர்களை நீக்கிவிட்டு, அந்தப் பக்கம் இருப்பவர்களை மட்டும் சொல்லவில்லை. எல்லாப் பகுதியினருக்கும்தான் கூறினேன். இந்த மன்றத்தின் பெருமையையும் புகழையும் காப்பாற்றக் கூடிய வகையில் உறுப்பினர்கள் நடந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்பொழுது அடுத்த அலுவலுக்குச் செல்கிறேன்.

(3) அறிவிப்பு.

தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/73).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு, 1973 ஆம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/73) பேரவை ஆய்வு செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/73).

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/73) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

---

* 3—8—1973 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்